**செய்தி வெளியீடு**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு வரும் குடும்ப அட்டைதாரர்களின் குறைதீர் முகாம்கள் குறித்த கலந்தாய்வு கூட்டம் **11.11.2014** அன்று சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளைக் களைவதற்கும், குடும்ப அட்டைகள் குறித்த மக்களின் குறைகளைக் கேட்டு உடனுக்குடன் நிவர்த்தி செய்யவும், உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்கள் நடத்தும், **“குறைதீர் முகாம்கள்”** சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும், மாதந்தோறும் 2ம் சனிக்கிழமையன்று காலை 10 மணி முதல் 1 மணி வரை ஒவ்வொரு வட்டம் மற்றும் சென்னை மாநகர மண்டலங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கப்படும் குடும்ப அட்டை கோரும் மனுக்கள், அட்டைகளின் நகல் கோருதல், குடும்ப அட்டைகளில் உறுப்பினர்களில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம், எரிவாயு இணைப்புகள் மற்றும் இவை தொடர்பான திருத்தங்கள் குறித்த மனுக்கள் பிற்பகல் வரை பெறப்பட்டு, உரிய பரிசீலனைக்குப் பிறகு அன்று மாலைக்குள் அவற்றுக்கு தீர்வு காணப்படுகிறது. இக்குறைதீர் முகாம்களில் மாவட்ட, வட்ட வழங்கல் அலுவலர்கள், வருவாய் துறை அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு மாதமும் சராசரியாக 1800 மனுக்களும், ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும், மாதந்தோறும் சுமார் 10,000 மனுக்களும் பெறப்படுகின்றன. ஜூன் 2011 முதல் நவம்பர் 2014 வரையில் இம்முகாம்களில் 2 இலட்சத்து 95 ஆயிரத்தி 942 மனுதாரர்கள் பயனடைந்துள்ளனர். அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விலையில்லா அரிசி வழங்கி, **இவ்வகை குறைதீர் முகாம்களை நடத்தும் ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும் தான் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.** இத்திட்டத்தின் செயல்பாடுகள் செம்மையாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அலுவலர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றிட வேண்டுமென மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டில் சிறப்பாக நடைபெறும் இத்திட்டத்தினை நேரில் ஆய்வு செய்த மத்திய அரசின் உணவுத்துறை உயர் அதிகாரிகள் இத்திட்டத்தின் செயல்பாடுகளைப் பாராட்டி, இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களும் இதனைப் பின்பற்ற வேண்டுமென புதுடெல்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டங்களில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 01.06.2011 முதல் 31.10.2014 வரை 10 இலட்சத்து 82 ஆயிரத்து 279 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், 3 இலட்சத்து 27 ஆயிரத்து 947 போலிக் குடும்ப அட்டைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசு உணவுத்துறை முதன்மை செயலாளர் திருமதி.எம்.பி.நிர்மலா,இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத்துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**